அளவிற்கு முன்னுதாரணமாக, தலைவர் கலைஞர் அவர்கள் 1,51,78,319 ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

78—

சாலை சீரமைப்பு

***20702—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலை, சித்திரங்கோடு-வேர்க்கிளம்பி சாலைகளை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையளிக்க அனுமதி கோருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலையானது, குளச்சல் முதல் திருவட்டாறு வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலைக்ள் அமைந்துள்ள பகுதியாகும். இந்தச் சாலை கடந்த நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அழகிய மண்டபம் முதல் ஆற்றூர் வரையிலான பகுதியை இருவழிச் சாலையாக மாற்றுவதற்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த மாதம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணி தொடங்கும். மேலும், இன்னொரு கேள்வியானது, சித்திரங்கோடு முதல். வேர்க்கிளம்பி வரையிலான சாலை, இடைவெளித் தடமாக மாற்றுவது குறித்து கேட்டிருக்கிறார். அந்தச் சாலை மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், நொடிகள் சரிசெய்யப்பட்டு அதுவும் ஏற்றவகையில் உள்ளது. எனவே, இந்த அளவில் இந்தச் சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா ரோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். இந்தச் சாலைகள் - அதே சாலையிலே கனரக வாகனங்கள் அதிகமாக செல்லக்கூடிய, போக்குவரத்து நெருக்கடி மிகுந்த அளவில் அமைந்துள்ள பகுதியாக இருக்கிறது. எனவே, இந்தச் சாலைப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? மேக்கோடு-இலந்தையம்பலம் சாலையில், வேர்க்கிளம்பி-சாமியார்மடம் சாலை, இருவழிச் சாலையாக மாற்றப்படும் என்று 1999 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்மூலமாக அறிவிக்கப்பட்டு, இதுவரையிலும் அந்தச் சாலைப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இரண்டு சாலைப் பணிகளும் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழிச் சாலையை இருவழிச் சாலையாகவோ, இடைவழிச் சாலையாகவோ மாற்றுவதற்கும், அதேபோல நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கும் அந்தச் சாலைகளில் போக்குவரத்துச் செறிவு கணக்கெடுக்கப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இரண்டு கேள்விகளில் ஒன்றான முதல் கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் தெரிவித்திருக்கிறேன்.

திருவட்டாறிலிருந்து குளச்சல்வரை செல்லக்கூடிய அந்த மாநில நெடுஞ்சாலையில் ஏறத்தாழ கிலோ மீட்டர் 14/4-லிருந்து 23/9 முடிய உள்ள பகுதி இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு ஏற்ற பகுதியாகும். போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாகவும் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை இருவழிச் சாலையாக மாற்ற கடந்த நிதியாண்டிலே, ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ஏறத்தாழ 293 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19-3-2008 அன்றுதான் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது. இடையிலே மழை பெய்த காரணத்தால், மேற்படி பணியைத் துவங்குவதிலே சிறிது காலதாமதம்

TRUTH ALONE TRIUMPHS

ஏற்பட்டது. மேற்படி பணி விரைவில் துவங்கப்பட்டு உரிய காலத்திற்குள் பணி முடிக்கப்பட இருக்கின்றது. அதேபோல, மாவட்ட இதர சாலையானது, போக்குவரத்துச் செறிவு குறைவாக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்பட்ட அந்தச் சாலை கிலோ மீட்டர் 0/0-லிருந்து 6/9 வரை இலந்தையம்பலம்-மேக்கோடு சாலையாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலையில், அந்தப் பகுதியில் மட்டும் போக்குவரத்துச் செறிவு இருக்கின்ற காரணத்தால், இருவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள பகுதியில் போக்குவரத்துச் செறிவு இல்லை. எனவே, அதற்கு வாய்ப்பில்லை.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: அதேபோன்று, மேக்கோடு-குலசேகரம் சாலையில், அண்டூர் குலசேகரம் பகுதியும், குலசேகரம்-நாகக்கோடு, மாறப்பாடி-அருமனை ஆகிய இரண்டு சாலைகளும் இருவழிச் சாலைகளாக மாற்றப்படுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி மழை ஏற்படுகின்ற காரணத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முதலில் கேட்ட கேள்வி வேறு, இப்போது கேட்பது வேறு.

திருமதி ரா. லீமா றோஸ்: சாலைகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதால், சாலைகளின் ஆயுட்காலத்தை அதிகரிக்க நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள் போடும்போது அந்தச் சாலைகளில் ரப்பர் பயன்படுத்தப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாலைகளில் மிக முக்கியமான சாலைகளைக் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு நான் நேரடியாக ஆய்வு செய்தேன். மழை அதிகம் பெய்கின்ற காரணத்தினால் சாலைகள் பழுதடைகின்றன. அதுவும் குறிப்பாக, அந்தப் பகுதியிலே சாலை ஓரங்களில்தான் வீடுகளைத் தொடர்ந்து

கட்டியிருக்கின்றார்கள். அதுவும் குறிப்பாக, சுற்றுச் சுவர் கட்டி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், சாலையில் வரும் நீர் மழை பெய்யும் காலங்களில் எளிதாகச் செல்வதற்கு வழியில்லாமல், சாலையிலேயே தேங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த மாவட்டத்திலே அடிக்கடி சாலைகள் பழுதடைவதற்கு அதுதான் மிக முக்கியக் காரணமாக இருக்கிறது. அவற்றைத் தொடர்ந்து நல்ல முறையிலே பராமரிப்பதற்கு எதிர்காலத்திலே திட்டமிட இருக்கின்றோம். அதே நேரத்திலே, ரப்பர் கலந்த சாலை அமைக்கப்படுமா என்று இங்கே வினா எழுப்பியிருக்கின்றார்கள். அது குறித்தும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அது உகந்ததாக இருக்குமானால் அது பற்றி எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், சொல்லுங்கள்.

திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதி, திருச்சேரி, மாத்தூர் ரவுண்டானாவிலிருந்து தேசிய நெடுஞ்சாலை 210-ல் கிலோ மீட்டர் 15/0-லிருந்து 51/0 வரை போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக, குண்டும், குழியுமாக உள்ளது. அந்த தேசிய நெடுஞ்சாலைக்காக சமீபத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரியதாக அறிகிறேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. நாள்தோறும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் செல்வதால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள அந்தச் சாலையை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்ரமணியன், மூலக் கேள்வி என்ன, நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

திரு. ந. சுப்ரமணியன்: தார்ச் சாலையாக மாற்றித் தருவார்களா என்பதையும், அதேபோன்று களமாவூரிலிருந்து விராலிமலை செல்லும் மாவட்ட நெடுஞ்சாலையில் சமீபத்தில் கோரையாற்றிலிருந்து மணல் கடத்துவதால், அதிகப்படியான எடையுள்ள மணலை கடத்திச் செல்வதால், மாண்புமிகு எங்கள் அம்மா ஆட்சிக் காலத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS